**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–2

EA.No.4/2026

EP.No.160/2024

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி. சங்கிதா | வயது: 43 |
| த/பெ. : திரு. ரவீக்குமார் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

மனுதாரரின் அடுத்த சினேகிதர் ஆஜர் இல்லை. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். மனுவில் நான் 3 ம் தரப்பினர். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். ஆவணங்களை தாக்கல் செய்யப்படவில்லை.

**குறுக்கு விசாரணை**

தீர்ப்பு கடனாளி அழைத்து ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. முதல் எதிர்மனுதாரர்/DH தரப்பில் குறுக்கு விசாரணை

என்ன படித்துள்ளேன் என்றால் பட்டப்படிப்பு படித்துள்ளேன். வேலைக்கு செல்கீறிர்களா என்றால் இல்லை. மனுதாரர்கள் எப்படி எனக்கு பழக்கம் என்றால் 2 ம் எதிர்மனுதாரர் நந்தினி எனக்கு சகோதரி. அவர் சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. மனுதாரர்களின் அடுத்த சினேகிதர் வருமான வரி செலுத்திகிறாரா என்றால் ஆமாம். அவர் என்ன வேலை பார்த்துவருகிறார் என்றால் கோயிலில் பூஜை பார்த்து வருகிறார். வருமான வரி எவ்வளவு செலுத்துகிறார் என்றால் தெரியாது. நந்தினியும் மனுதாரர்களின் அடுத்த சினேகிதர் செல்வி சுந்தரம் ஒரே வீட்டில் வசிக்கவில்லை என்றால் ஆமாம்.

2. நந்தினிக்கு என்ன உடன் நிலை பிரச்சனை என்பதற்கு ஆவணங்கள் பார்த்ததில்லை என்றால் ஆமாம். நந்தினி மைனர் மனுதாரர்களை பார்த்துக்கொள்ளமுடியும் என்றால் சரியல்ல. மனஅழுத்ததில் உள்ளார். அதற்கு அவர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் இல்லை. ஆனால் மன வருத்ததில் உள்ளார். முதல் மனுதாரர் உரிய வயதை அடைந்துவிட்டார் என்றால் சரி. நந்தினி சொன்னதன் பேரில் அவருடைய தாயார் நிறைவேற்று மனு தொகையை செலுத்தாமல் ஏமாற்றுவதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நந்தினி என்னுடைய சகோதரி என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.13 19:14:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.